பக்கங்கள்: 10

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஆடி 11 வியாழக்கிழமை 27.07.2023 கதிர் 258

# மாகாண சபைகளில் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகளை தீர்க்க வேண்டியது அவசியம்

» 13 குறித்து அனைத்துத் தரப்பினருடனும் கலந்துரையாடியே தீர்மானம்
» எனக்கு யோசனைகளை முன்வைக்க மட்டுமே முடியும்
» பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கான புதிய சட்டங்களை
» நிறைவேற்றும் அதிகாரம் நாடாளுமன்றத்துக்கே உண்டு

**– சர்வகட்சி மாநாட்டில் ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு**

ஒன்பது மாகாண சபைகளில் ஏழு மாகாண சபைகள் சிங்கள மக்கள் பெரும் பான்மையாக வாழும் பிரதேசங்களில் அமைந்துள்ளன., எதிர்காலத்தில் மாகாண சபை முறைமையைத் தொடர்ந்து முன்னெடுக்க எதிர்பார்த்தால், ஏற்கனவே அடையாளம் காணப்பட்டுள்ள குறைபாடுகள் தீர்க்கப் படவேண்டும்.

அரசமைப்பின் 13ஆவது திருத்தம் தொடர்பில் தமிழ்க் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் மாத்திரம் கலந்து ரையாடுவது போதுமானதல்ல, அது முழு நாட்டிலும் தாக்கம் செலுத்தும் விடயம் என்பதால் அனைத்துத் தரப்பினருடனும்கலந்துரையாடி தீர்மானம் எடுக்க வேண்டும் என்பதே தமது நிலைப்பாடு எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று மாலை நடைபெற்ற சர்வகட்சிக் கூட்டத்தைத் தொடக்கி வைத்து உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்கஇதனைக் குறிப் பிட்டார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தேசிய நல்லிணக்க வேலைத்திட்டம் மற்றும் வடக்கு - கிழக்கு அபிவிருத்தித் திட்டம் குறித்து நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சித் தலைவர்களின் கருத்துக்களைப் பெறுவதற்காக இந்த சர்வகட்சி மாநாடு கூட்டப்பட்டது.

பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு, புதிய சட்டங்களை நிறைவேற்றும் அதிகாரம், தனக்கு மாத்திரமன்றி இதற்குமுன்னர்பதவியில்இருந்த நிறைவேற்று அதிகாரமுடைய ஏழு ஜனாதிபதிகளுக்கும் இருக்கவில்லை. புதிய சட்டங்களை நிறைவேற் றும் அதிகாரம்நாடாளுமன்றத்துக்கே இருக்கின்றது.

நாட்டுக்காக இந்த யோசனைகளை முன்வைப்பது மாத்திரமே எனது கடமை. இதனை நாடாளுமன்றமே நிறைவேற்றவேண்டும்.

நாடாளுமன்றத்தில் ஒரேயொரு வாக்கை மட்டும் வைத்துக்கொண்டு என்னால் இதனைச் செய்ய முடியாது. இந்தப்பணிகளைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைவரும் கூட்டாக ☞2

## இது ரகசியம் அல்ல!

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்றுக் கூட்டிய சர்வகட்சிக் கூட்டம் பிசுபிசுத்துப் போய்விட்டது. தமிழ்த் தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனுக்கும் ரணிலுக்கும் இடையில் ஏற்பட்ட தர்க்கம் இந்தப் பேச்சை இடைநடுவில் முறித்துக்கொண்டு ரணில் வெளியேறுவதற்குக் காரணமாகிவிட்டது. முன்னாள் கூட்டாளிகள், நம்பிக்கைக்குரிய தோழர்கள் இருவரும் நேற்றுப் பகிரங்கமாக மற்றைய கட்சித் தலைவர்கள் முன்னிலையில் மோதிக்கொண்டார்கள்.

மாகாணசபைத்தேர்தலா13ஆவதுதிருத்தச் சட்டமா என்பதிலேயே அவர்களுக்குள் கருத்து மோதல் ஏற்பட்டது. முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் மற்றும் கலாநிதி காசிலிங்கம் விக்னேஸ்வரன் ஆகியோரால்தயாரித்தளிக்கப்பட்டமாகாண சபைகளுக்கான ஆலோசனைக் குழுவை என்கிற திட்டத்தை வைத்துக்கொண்டு 13ஐ நிறைவேற்றும் விடயத்தை ஒப்பேற்றுவதே ரணிலின் திட்டமாக இருந்திருக்கக்கூடும். அதை அவர் அங்கு வெளிப்படையாகத் தெரிவிக்கவில்லை என்றாலும் ☞2

## கடனாவில் அமைச்சரானார் இலங்கை தமிழர் ஹரி சங்கரி

இலங்கைத் தமிழரான ஹரி ஆனந்த சங்கரி கனடாவில் அமைச்சராகப் பதவியேற்றுள்ளார்.

அந்த நாட்டின் சுதேசிய உறவுகள் துறை அமைச்சராக அவர் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ முன்னிலையில் நேற்றுப் பதவியேற்றுக்கொண்டார்.

கனேடிய அமைச்சரவை மாற்றத்தின்போது ஹரி சங்கரிக்கு இந்தப் புதிய பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஹரி ஆனந்தசங்கரி தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீரசிங்கம் ☞2

# பேச்சை முறித்துக்கொண்டு வெளியேறினார் ஜனாதிபதி

## மாகாணத் தேர்தலை நடத்த வலியுறுத்தியதால் அவருக்கு கோபம்

**அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் ஆராய்வதற்காகக் கூட்டப்பட்ட சர்வகட்சிக் கூட்டத்தில் இருந்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பேச்சை முறித்துக் கொண்டு திடீரென வெளியேறிச் சென்றார். இதனால் கூட்டம் எந்தவித உருப்படியான தீர்மானமோ முடிவோ இன்றி இடைநடுவில் முடிவடைந்தது.**

**கடந்த வாரம் இந்தியா சென்றிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அங்கு பிரதமர் நரேந்திர மோடியுடன் பேசும்போது, அதிகாரப் பகிர்வு தொடர்பில் நாடாளுமன்றத்தின் அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேசவுள்ளார் என்று தெரிவித்திருந்தார். அவர் நாடு திரும்பிய பின்னர் நேற்று அந்தக் கூட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.**

**ஜனாதிபதி செயலகத்தில் மாலை 5.30 மணிக்குத் தொடங்கிய கூட்டம் 8 மணி வரையும் தொடர்ந்தது.** ☞2

## தனித்திருந்த மூதாட்டியின் சடலம் மட்டுவிலில் மீட்பு

### கொல்லப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகம்

யாழ்.தென்மராட்சி மட்டுவில் வடக்கு பகுதியிலுள்ள வீட்டில் தனிமையில் வசித்து வந்த மூதாட்டி இறந்த நிலையில் மீக்கப்பட்டுள்ளார். அவரது உடலில் காயங்கள் காணப்படுவதால் அவர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

தம்பையா சரோஜினி (வயது82) என்பவரின் ☞2



### தமிழ் மக்கள் ஒப்பந்தத்தில் கையொப்பம் இட்டிருந்தால்

## சமஷ்டியைத்தான் கேட்டிருப்போம் 13ஐக் கேட்டிருக்கவே மாட்டோம்

### விக்னேஸ்வரன் ரணிலுக்கு எடுத்துரைப்பு

தமிழ் மக்களுடன் ஒப்பந்தம் செய்திருந்தால் சமஷ்டியைத்தான் கேட்டிருப்போம் அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தைக் கேட்டிருக்கமாட்டோம் என்று நேற்றைய சர்வகட்சிக் கூட்டத்தில் தெரிவித்தார் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்.

அந்தக் கூட்டத்தில் தான் முன்வைத்த கருத்துக்கள் தொடர்பாக அவர் தெரிவித்ததாவது:

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை நீங்கள் நினைத்து நினைத்த மாதிரியெல்லாம் மாற்ற முடியாது. இரண்டு இறைமையுள்ள நாடுகள் சேர்ந்து செய்துகொண்ட ஒப்பந்தம்தான் 13ஆவது திருத்தம். அது தமிழ் மக்களுக்காகத் தான் செய்யப்பட்டது. ஆனால் அதில் தமிழ் மக்கள் கையெழுத்து வைக்கவில்லை. அதனால் நீங்கள் நினைத்தபடி அதனை மாற்ற முடியும் என்று எண்ணவேண்டாம். அந்த ஒப்பந்தத்தில் தமிழ் மக்கள் கையெழுத்து வைக்கும் நிலமை இருந்திருந்தால் நாங்கள் அப்போதே சமஷ்டியைத்தான் கேட்டிருப்போம். 13ஆவது திருத்தத்தைக் கேட்டிருக்கமாட்டோம். ☞2

## அமைச்சர் டக்ளஸ் பொய் என்றது நேற்று உண்மையான விசித்திரம்

ந.லோகதயாளன்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருந்து மேலும் 2 ஆயிரத்து 500 ஏக்கர் நிலத்தை வனவளத் திணைக்களம் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவது நேற்றுதினம் உறுதி செய்யப்பட்டுள்ளது. எந்தெந்த இடங்கள் இவ்வாறு கொண்டுசெல்லப்படவுள்ளன என்கிற வரைபடம் யாழ். மாவட்டச் செயலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பான செய்தியை காலைகதிர் முதலில் வெளியிட்டபோது அதனை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முழுப் பொய் என்று தெரிவித்திருந்தார். அப்படி எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று தெரிவித்திருந்தார்.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் நல்லூர், சாவகச்சேரி, வேலணை, மருதங்கேணி, சண்டிலிப்பாய், சங்காணை, காரைநகர், பருத்தித்துறை ஆகிய எட்டு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் இருந்து இந்த 2 ஆயிரத்து 500 ஏக்கர் நிலமும் வனவளத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்படவுள்ளது. இந்த நிலை ஏற்படுவதோடு கடல் அரிப்பு மற்றும் இயற்கை வளம் பேணல் என்பவற்றிற்காக கண்டல் தாவரங்கள் (மங்குரோவ்) நாட்டப்பட்ட மற்றும் இயற்கையாக அவை வளர்ந்துநிற்கும் பிரதேசங்கள் அனைத்தும் வனவளத் திணைக்களத்திற்கு உரியன என வர்த்தமானி அறிவித்தல் பிரகனடப்படுத்தப்படவுள்ளது.

புதிதாக கோரப்படும் பிரதேசங்களான 800 கெக்டேயர் பரப்பளவுள்ள அல்லது 2 ☞2

## கல்கிஸை முதல் காங்கேசன் வரை யாழ். நிலா புதிய சொகுசு ரயில்

### ஓகஸ்ட் 4 முதல் அறிமுகம்

தெற்கிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு 'யாழ் நிலா' என்ற பெயரில் அதி சொகுசு தொடருந்து சேவை ஓகஸ்ட் 4 முதல் இயக்கப்படவுள்ளதாகப் போக்குவரத்து அமைச்சர் பந்துலகுணவர்த்தன அறிவித்துள்ளார்.

கல்கிஸ்சையிலிருந்து காங்கேசன்துறை இந்த அதி சொகுசு தொடருந்து சேவை வார இறுதி நாட்களில் இடம பெறவுள்ளது. நல்லூர் திருவிழாக்காலங்களில் இதனைத் தினமும் இயக்குவதற்கும் திட்டமிடப்பட்டு வருகின்றது.

வெள்ளிக்கிழமை இரவு 10.30 மணிக்கு கல்கிஸ்சை தொடருந்து நிலையத்திலிருந்து புறப்பட்டு சனிக்கிழமை அதிகாலை 6 மணிக்கு காங்கேசன்துறையைச் சென்றடையும் யாழ். நிலா, காங்கேசன்துறையிலிருந்து ஞாயிற்றுக்கிழமை இரவு 10.30 மணிக்கு புறப்பட்டு திங்கட்கிழமை அதிகாலை 6 மணிக்கு கல்கிஸ்ஸையை மீண்டும் வந்தடையும் என அமைச்சர் தெரிவித்தார்.

இந்த அதி சொகுசு தொடருந்தில் உணவகங்கள் உள்ளிட்ட சகல வசதிகளும் உள்ளதாகவும், முன்பதிவு செய்து மட்டுமே இதில் பயணிக்க முடியும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

'யாழ் நிலா' ரயிலில் முதல் வகுப்பு ☞2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

கூட்டத்தில் அவருக்கும் முன்னாள் முதலமைச்சருக்கும் நன்கு ஒத்துப்போனது. ஆனால்முதலமைச்சரின் சட்ட மாணவனுக்கு ஒத்துபோகாததால் எல்லாம் அரைகுறையாக முடிந்துவிட்டது.

முதலமைச்சரின்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதாகக் காட்டி தேர்தலை ஒத்தி வைக்கக்கூடிய வாய்ப்பை சுமந்திரன் குழப்புகின்றார் என்பதால் ரணிலுக்குக் கோபம் வந்திருக்க வாய்ப்புகள் உண்டு. சுமந்திரன் தேர்தலையும் உடனடியாக நடந்தவேண்டும் என்று வலியுறுத்தினார். அதற்கு போன கூட்டத்தில் 13 வேண்டாம் என்று கூறிய நீங்கள் இப்போது எதற்கு தேர்தல் வேண்டும் என்கிறீர்கள் என்று எகிறினார் ரணில். இந்தச் சர்ச்சையில்தான் கடைசியில் கோபப்பட்டு வெளியேறினார்.

கூட்டத்தில் பொலிஸ் அதிகாரங்கள் குறித்தும் பேசப்பட்டிருக்கின்றது. அதனை உடனடியாகச் செய்யமுடியாதுஎன்றும்அதற்கான சட்டங்கள் இன்னும் இயற்றப்படவில்லை என்பதால், காலப்போக்கில்அதனை நிறைவேற்றலாம் என்றும் ரணில்தெரிவித்திருந்தார். அது குறித்துக்கருத்துத்தெரிவித்த முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன், இந்தியாவின் பாண்டிச்சேரியில்இருப்பதைப் போன்று ஆயுதங்கள் அற்ற பற்றன் பொல்லுகள் மற்றும் கைவிலங்கு மட்டும் கொண்டபொலிஸாருக்கான அதிகாரத்தைக்கொடுக்கலாம் என்றார். அதை அவர் குறிப்பிடும்போது திங்கட்கிழமை உங்களைச் சந்தித்தபோது நான் கூறியதைப் போன்று என்று விளித்தார்.

ஆக மொத்தத்தில் இரண்டு நாட்களுக்கு முன்னர் ஜனாதிபதியும் விக்னேஸ்வரனும் சந்தித்தபோது இந்த விடயம் குறித்து அவர்கள் பேசிக்கொண்டு, இன்றைக்கு ஆளுக்காள் ஆதரவாக நடந்துகொண்டார்கள்என்பது வெளிச்சமாகியது.

அன்றேநான்சொன்னதைப் போன்று 2015 முதல்ரணில் விக்கிரமசிங்க சவாரி விட்ட சம்பந்தன்மற்றும்சுமந்திரன் என்கிற குதிரைகள் இன்று முரண்டுபிடிக்க, அவர் இப்போது விக்னேஸ்வரன் என்கிற குதிரையில் சவாரி விடத் தொடங்கியுள்ளார். ரணிலுக்கு குதிரைகளை மாற்றுவது ஒன்றும் கடினமான காரியமல்ல, தனக்குக் காரியமாகவேண்டும் என்றால் அவர் எந்தக் குதிரையிலும் சவாரி விடுவார். முன்னாள் குதிரைகள் முரண்டு பிடிப்பதில் பயனேதுமில்லை.

**இடிமின்னல்**
(idiminnal23@gmail.com)

## மாகாண ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.

ஒன்பது மாகாண சபைகளில் ஏழு மாகாண சபைகள் சிங்கள மக்கள் பெரும்பான்மையாகவாழும் பிரதேசங்களில் அமைந்துள்ளன., எதிர்காலத்தில்மாகாணசபைமுறைமையைத் தொடர்ந்து முன்னெடுக்க எதிர்பார்த்தால், ஏற்கனவே அடையாளம் காணப்பட்டுள்ள குறைபாடுகள்தீர்க்கப்படவேண்டும்.

முதல் பட்டியலில் உள்ள, மாகாண சபைகளுக்கு வழங்கப்பட வேண்டிய பல விடயங்கள் மத்திய அரசின் கீழ் இருக்கின்றன. அந்த அதிகாரங்களைப் போன்றேவிவசாயம்மற்றும் சுற்றுலாபோன்றதுறைகளில் கீழ்மட்ட செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான அதிகாரங்களும் மாகாண சபைகளுக்கு வழங்கப்படவேண்டும்.

நாட்டுக்கான கொள்கைகளை மத்திய அரசு வகுக்க வேண்டும். அனைத்துத் துறைகளிலும் அபிவிருத்தி நடவடிக்கைகளை உரிய முறையில் அமுல்படுத்துவதற்குத் தேவையான வசதிகளைமாகாணசபைக்கு வழங்கவேண்டும்.

அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரங்களைவழங்குவது தொடர்பில் அனைத்துத் தரப்பினரும்ஒன்றிணைந்து கலந்து ரையாடி தீர்மானம் எடுக்கவேண்டும்.

மாகாண சபை உறுப்பினர்கள் பதவியை வகித்துக்கொண்டுநாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்படுவதற்கும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அந்தப் பதவியை வகித்தவாறே மாகாண சபை உறுப்பினராகச் செயற்படுவதற்கும் இடமளிக்கும் வகையில் யோசனைகள்முன்மொழியப்பட்டுள்ளன. அது தொடர்பில் கலந்துரையாடிமுடிவுஎடுக்க முடியும் - என்று ஜனாதிபதி தனதுரையில் தெரிவித்தார்.

பிரதமர் தினேஷ் குணவர்தன, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன, எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், ஈ.பி.டி.பி. செயலாளர்நாயகம்அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இ.தொ.கா. பொதுச்செயலாளர் அமைச்சர் ஜீவன் தொண்டமான்,நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், மனோ கணேசன், ரவூப் ஹக்கீம், சி.வி.விக்னேஸ்வரன், சாகர காரியவசம், டலஸ் அழகப்பெரும, விமல் வீரவன்ச, கெவிது குமாரதுங்க, வாசுதேவ நாணயக்கார, உதய கம்மன்பில, சரத் வீரசேகர,வண.அத்துரலியே ரத்ன தேரர், வீரசுமன வீரசிங்க, அநுரபிரியதர்ஷன யாப்பா,லக்ஸ்மன்கிரியெல்ல உள்ளிட்ட பல்வேறு கட்சிகளின் பிரதிநிதிகள் இதில் கலந்துகொண்டனர் - என்றுள்ளது.. (02)

## தனித்திருந்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சடலம் நேற்றுக் காலையில் மீட்கப்பட்டதாக சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்தனர்.

அவரது உடலில் காணப்படும் வெட்டுக் காயங்கள் என்று கருதப்படக்கூடிய காயங்கள் காரணமாக அவர் கொலை செய்யப்பட்டிருக்கலாம்என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணைகளைத் தொடங்கியுள்ளனர்.

## சமஷ்டியைத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களான அமிர்தலிங்கம், சிவசிதம்பரம், சம்பந்தன் ஆகிய மூவரும்1987ஆம்ஆண்டே அப்போதைய பாரதப் பிரதமர் ரஜீவ் காந்திக்கு எழுதிய கடிதத்தில் 13ஐ நிராகரித்திருக்கிறார்கள். எனவே நீங்கள் 13ஐ நடைமுறைப்படுத்துவது ஏதோ தமிழர்களுக்கு எதையோ கொடுக்கப்போகிறீர்கள்என்று காட்ட முற்படவேண்டாம். இது சட்டத்தில் ஏற்கனவே இருக்கின்றது. இருப்பதை நடைமுறைப்படுத்தத்தான் பார்க்கிறோம்.

மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக இருந்தபோது அவர் முன்பாக 9 மாகாணங்களின் முதலமைச்சர்களும் நடத்தியகூட்டத்தில், எங்களுக்குச் சகல உரிமைகளும் வேண் டும் சமஷ்டி வேண்டாம் என்று சிங்கள முதலமைச்சர்ஒருவரேகூறினார். சகல உரிமைகளும் வேண்டும் என்று சிங்கள முதலமைச்சரே சொன்னதைக் கவனத்தில் எடுக்கவேண்டும். ஆகவே எல்லா உரிமைகளையும் மாகாணங்களுக்குத் தர வேண்டியதுதான் உங்கள் பொறுப்பு. - என்று தெரிவித்தார்.

## பேச்சை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டத்தின் தொடக்கத்தில் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில்ஜனாதிபதி உரையாற்றினார். மாகாண சபைகளைத் தொடர்ந்தும் செயற்படுத்துவதானால், அதில் ஏற்கனவே அடையாளம் காணப்பட்டுள்ள குறைபாடுகளைச் சீர் செய்ய வேண்டும் என்றார். அதற்காகவே புதிய சட்டங்கள் கொண்டுவரப்படவுள்ளன என்றார்.

நாட்டின் கொள்கைசார் முடிவுகளை மத்திய அரசு எடுத்துக்கொண்டு ஏனைய அனைத்து விடயங்களையும் மாகாண சபைகள் மேற்கொள்ளும் வகையில் அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் என்றார்.

அதிகாரங்கள் பகிரப்படுவதற்கு எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, நாடாளுமன்ற உறுப்பினர்களானலக்ஸ்மன்கிரியெல்ல, பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், வாசுதேவநாணயக்கார, வீரசுமனஆகியோர்ஆதரவாகக் கருத்துத் தெரிவித்தனர். விமல் வீரவன்ஸ, உதய கம்பன்பில, சரத் வீரசேகர போன்றோர்வழக்கம்போல அதற்கு எதிராகக் கருத்துத் தெரிவித்தனர்.

தமிழ் அரசுக் கட்சியின் பெருந்தலைவர்இரா.சம்பந்தன் தனது உரையில், தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமை உள்ளவர்கள். அதனை உள்ளகமாகப் பயன்படுத்துவதற்குத் தயாராக இருக்கின்றோம் என்று நீண்ட காலமாகக் காத்திருக்கின்றோம்.ஆனால், எதுவும்நடைபெறவில்லை. காலத்தை இழுத்தடிப்பதும் ஏமாற்றுவதுமே தொடர்கின்றது. இப்படிச் சென்றால் நாம் வெளியக சுயநிர்ணய உரிமையைக்கோரவேண்டி வரும். பயன்படுத்துவதற்காக வெளிநாடுகளின்உதவிகளை நாடவேண்டியவர்களாக இருப்போம் என்று ஆணித்தரமாகத் தெரிவித்தார்.

இதுவரைக்கும் எதுவும் நடைபெறவில்லை. ஏற்கனவே ஆராயப்பட்டு இணங்கப்பட்ட விடயங்கள் இருக்கின்றன. அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு மீண்டும்மீண்டும்கூட்டங்கள் தேவையில்லை என்றார்.

ஐக்கிய மக்கள் சக்தியின்தலைவர்கள்உரையாற்றும்போது, மாகாண சபைத் தேர்தல்களை உடன் நடத்தவேண்டும் என்று வலியுறுத்தினார்கள். அதற்கு அது பற்றிப் பின்னர் பேசலாம்,அதுபற்றிஆராய்ந்து தேர்தலை நடத்தும் முறையைத் தீர்மானிக்க நாடாளுமன்றத்தெரிவுக்குழுஒன்று நியமிக்கப்படவேண்டும் என்றுஜனாதிபதிதெரிவித்தார்.

அப்போது குறிக்கிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், இந்த நாடாளுமன்றம் தேர்தல் முறைமை தொடர்பில் ஆராய்வதற்காக ஏற்கனவே ஒரு தெரிவுக் குழுவை சபாநாயகர் தலைமையில் நியமித்தது. அதன் அறிக்கையும் இங்கே இருக்கின்றது (தூக்கிக் காட்டினார்). அதில் பழைய தேர்தல் முறையில் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படவேண்டும்என்று தெரிவித்திருக்கின்றது. அதற்காகவே என்னால் தனிநபர் சட்டவரைவு ஒன்றும் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டு வர்த்தமானியிலும்வெளியிடப்பட்டது என்றார்.

உடனே ஆத்திரப்பட்டுக் குறுக்கிட்டஜனாதிபதி, நீங்கள் அதிகாரப் பகிர்வைத்தானே இதுவரை கேட்டு வந்தீர்கள், இப்போதுஎதற்குத்தேர்தலைக் கேட்கிறீர்கள்என்றுஎகிறினார்.

அதற்குப் பதிலளித்த சுமந்திரன் மற்றும் சித்தார்த்தன் ஆகியோர், நாம் நீண்ட காலமாகவே தேர்தலை வலியுறுத்தி வருகின்றோம், அதற்காகவே சட்டவரைவையும்நாடாளுமன்றத்தில் முன்வைத்திருக்கின்றோம் என்றனர். அதற்கு இப்போது இரண்டையும் செய்ய முடியாது இரண்டில் ஒன்றைத்தான்செய்யமுடியும் என்று ஆத்திரப்பட்டார் ஜனாதிபதி. அதிகாரப் பகிர்வு அல்லது தேர்தல் இரண்டில் ஒன்றைத்தான்செய்யமுடியும் என்றார் அவர்.

அப்படிஅதிகாரதைப்பகிர்ந்து கொண்டாலும் யாருடன் பகிர்ந்து கொள்வீர்கள்? தேர்தலை நடத்தி மாகாண சபைகளில் மக்கள் பிரதிநிதிகள் இருந்தால்தானே அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்ள முடியும்? எனவே இரண்டும்வெவ்வேறானவை இல்லையே. தேர்தலையும் நடத்திக்கொண்டு அதிகாரப் பகிர்வு விடயங்களையும் முன்கொண்டு செல்லலாம் என்று விளக்கமளித்தார் சுமந்ததிரன்.

அப்போது இடைமறித்த வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் விக்கினேஸ்வரன், மாகாண சபைகைளப் பலப்படுத்தும் வகையில் அதிகாரப் பகிர்வை முதலில் செய்து கொண்டுபின்னர்தேர்தலை நடத்தலாம்என்றார். ஆனால் அதனை முன்னாள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றஉறுப்பினர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்றுசுமந்திரன்அறிவித்தார். "இது வடக்கு மாகாணத்தின் ஒரு நாடாளுமன்ற உறுப்பினரின் (விக்கி) கருத்து மட்டுமே. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலுள்ள தலைவர்கள் இங்கிருக்கிறார்கள், அவர்கள் சம்மதத்துடன் கூட்டமைப்பின் 10 நாடாளுமன்ற உறுப்பினர்களும் இதனை எதிர்கின்றோம்' ' என்றார்.

அதற்குஅதிகாரப்பகிர்வைக் கேட்டுவந்தநீங்கள்திடீரென இப்போது எதற்கு தேர்தலை வலியுறுத்துகிறீர்கள் என்று ஆத்திரத்துடன் கேட்ட ஜனாதிபதி, சரி இத்துடன் கூட்டம் முடிகின்றது என்று கூறிக்கொண்டுகூட்டத்தைப் பாதியிலேயே முடித்துக் கொண்டுவெளியேறிவிட்டார். இதனால்கூட்டம்பாதியிலேயே எந்தவித உருப்படியான முடிவுகளும் எட்டப்படாமல் முடிவடைந்தது.

## அமைச்சர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆயிரத்து 400 ஏக்கர் வரையிலானநிலப்பகுதிகளின் விவரமும்வரைபடமும்யாழ். மாவட்டச் செயலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் மே மாதம் 25 ஆம் திகதி இடம்பெற்ற கலந்துரையாடலில் வன வளத் திணைக்கள அதிகாரிகளால்இந்தவிவரம்ஏனைய அதிகாரிகளுக்குத்தெரியப்படுத்தப்பட்டிருந்தது. அது தொடர்பான செய்தி 2023-05-27 காலைக்கதிர் பத்திரிகையின் மாலைப் பதிப்பில் முதன் முதலில் வெளியாகியதது. மறுநாள் குடாநாட்டில் இருந்து வெளிவரும் சில பத்திரிகைகளிலும் வெளிவந்திருந்தது.

இந்த நிலையில், 2023-05-30 அன்று யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இச்செய்தியைக் குறிப்பிட்டு நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் கேட்டபோது அதுபொய்யான செய்தி 1985ஆம்ஆண்டிற்கு பினபு திணைக்களங்கள் வர்த்தமானிமூலம்சுவீகரித்த நிலங்கள் அனைத்தையும் விடுவிக்கப்பதே ஜனாதிபதியின்கொள்கைஎனஅமைச்சர் டக்ளஸ் தேவானாந்தா தெரிவித்தார்.

## கல்கிஸை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆசனமொன்றுக்கு 4000 ரூபாவும், இரண்டாம்வகுப்பு ஆசனமொன்றுக்கு 3000 ரூபாவும்கட்டணம்அறவிடப்படவுள்ளதுடன், மூன்றாம் வகுப்பு ஆசனமொன்றுக்கு 2000 ரூபாவும் அறவிடப்படவுள்ளது.

இந்த தொடருந்து சேவையை நல்லூர் திருவிழாக் காலத்தில் ஒகஸ்ட் 18 முதல் நாளாந்தம் இயக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

---

இனவாத அமைப்புகள் படையினரின்

# தமிழர்கள் மீதான அராஜகங்களை தடுத்து நிறுத்த நடவடிக்கை தேவை

## சம்பந்தன் ஆட்சியாளர்களிடம் வலியுறுத்து

'இனவாத அமைப்புக்கள், பொலிஸார், இராணுவத்தினர் ஆகிய தரப்பினர் மக்கள் மீது அரங்கேற்றும் அராஜகச் செயல்களைக் கைகட்டிவேடிக்கை பார்க்காதீர்கள். அவற்றை உடனடியாகத் தடுத்து நிறுத்துங்கள்.'

இவ்வாறு ஆட்சியாளர்களிடம் வலியுறுத்தியுள்ளார் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பெருந்தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவருமான இரா.சம்பந்தன்.

கொழும்பு - பொரளையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை 'கறுப்பு ஜூலை' நினைவேந்தல் நிகழ்வைச் சிங்கள ராவய அமைப்பினர் மற்றும் பொலிஸார் - இராணுவத்தினர் இணைந்து குழப்பியிருந்தமை தொடர்பில் கருத்துரைக்கும்போதே இரா.சம்பந்தன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இறந்தவர்களை நினைவேந்துவது ஒரு நாட்டினுடையபிரஜையின்அடிப்படைஉரிமை. அந்த உரிமையை எவரும் மீற முடியாது. அதை மீறுவது பெருந்தவறு. இப்படியான அத்துமீறல் செயலை நாம் அனைவரும் வன்மையாகக் கண்டிக்க வேண்டும். இந்தச் செயலை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. இந்த அராஜகச் செயலுக்கு எதிராக எமது வன்மையான கண்டனங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இனவாத அமைப்புக்கள், பொலிஸார், இராணுவத்தினர் ஆகிய தரப்பினர் மக்கள் மீது அரங்கேற்றும் அராஜகச் செயல்களை அரசு கைகட்டி வேடிக்கை பார்க்கக்கூடாது. அதை அரசு உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும். அதேசமயம் நாட்டில் குழப்பங்களை ஏற்படுத்தும் வகையில் எவரும் நடக்கக்கூடாது. சிலநேரங்களில் சிலர் குழப்பங்களை ஏற்படுத்துவதற்குக் காத்துக்கொண்டிருக்கின்றார்கள். அவர்களுடைய சூழ்ச்சித் திட்டங்களுக்கு நாம் எவரும் பழிபோகக்கூடாது. அதில் நாம் கவனமாக இருக்க வேண்டும்.

அஹிம்சைப் போராட்டங்கள் மற்றும் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்துவது மக்களுடைய அடிப்படை உரிமை. அவற்றை மறுப்பது - தடுப்பது பிழை - என்றார். (02)

# தலைக்கவசத்தால் தாக்கி குடும்பஸ்தர் படுகொலை

## பெறாமகன்கள் வெறியாட்டம்

தலைக்கவசத்தால் தாக்கப்பட்ட நிலையில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நுவரெலியா - கந்தப்பளையில் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கந்தப்பளையைச்சேர்ந்த 46 வயதுடைய நபரே இதன்போது சாவடைந்துள்ளார் என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

உயிரிழந்த நபரின் சகோதரரின் இரண்டு மகன்களே மது போதையில் வந்து தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய குறித்த இருவரையும் கைது செய்வதற்குப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (02)

# ஊமை இளைஞர் வெட்டிக்கொலை

## நாரம்மலையில் கொடூரம்

வாய்பேச முடியாத இளைஞர் ஒருவர் வாளால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் குருநாகல் - நாரம்மலை பிரதேசத்தில் வியாழக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

அப்பிரதேசத்தைச்சேர்ந்த 29 வயதுடைய லசந்த பண்டார என்பவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

லசந்த பண்டாரவின் தந்தை மீது தாக்குதல் நடத்த வாள்களுடன் ஒரு குழுவினர் நேற்று இரவு வீட்டுக்கு வந்துள்ளனர். அதன்போது தந்தை, வீட்டின் பின்வாசலால் தப்பியோடியநிலையில் மகன் மீது குறித்த வாள்வெட்டுக் குழுவினர் தாக்குதல் மேற்கொண்டுவிட்டுச் சென்றுள்ளனர்.

பாரிய வெட்டுக்காயங்களுக்கு உள்ளாகிய வாய் பேச முடியாத லசந்த பண்டார உடனடியாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போதிலும் அவர் உயிரிழந்து விட்டார்.

சம்பவ இடத்துக்கு வந்து விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், கொலையாளிகளைக் கைது செய்யும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர். (02)

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி: kalaikkathirnews@gmail.com



# 13ஐ நடைமுறைப்படுத்தினால் நல்லிணக்கம் கெட்டுவிடுமாம்

## முஸம்மில் எம்.பியின் கருத்து இது

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தினால் கிழக்கு முஸ்லிம்களும், வடக்கு தமிழர்களும் காணி உரிமைக்காகக்கடும்போராட்டத்தில் ஈடுபடுவார்கள். இதனால், இருக்கும் தேசிய நல்லிணக்கம் இல்லாமல் போகும் என தேசிய சுதந்திர முன்னணியின் பிரசார செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மொஹமட் முஸம்மில் தெரிவித்தார்.

எதுல்கோட்டை பகுதியில் உள்ள தேசிய சுதந்திர முன்னணியின்காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறுகுறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடடவை வருமாறு -

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்த ஜனாதிபதி இணக்கம் தெரிவித்தார் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் உட்படதமிழ்பிரிவினைவாதிகள் குறிப்பிட்டுள்ள நிலையில் இந்த விடயம் தொடர்பில் தமது நிலைப்பாட்டை உறுதியாகக் குறிப்பிடாமல் தேசிய மக்கள் சக்தி தலைமறைவாகி விட்டது.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் தொடர்பில் தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் ரில்வின் சில்வாவின் நிலைப்பாட்டுக்கும், அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரிணி அமரசூரியவின் நிலைப்பாட்டுக்கும் இடையில் பாரிய வேறுபாடுகள் காணப்படுகின்றன. இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழர்களின் வாக்குகளைக் கைப்பற்றுவதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 13 ஆவது திருத்தம் என்ற அரசியல் பிரசாரத்தை கையில் எடுத்துள்ளார். அவருக்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் முழுமையான ஒத்துழைப்பு வழங்குகிறார்கள்.



அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்தும் மக்களாணை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு கிடையாது. நாட்டு மக்கள் இனிவரும் காலங்களிலும் அவருக்கு ஆணை வழங்கப் போவதில்லைநாடுவங்குரோத்துநிலை அடைந்துள்ளபின்னணியில் நாட்டை பிளவுபடுத்தும் செயற்பாடுகளில்ஈடுபடுவதை ஜனாதிபதி தவிர்த்துக்கொள்ள வேண்டும். நாட்டு மக்களின் வாழும் மற்றும் வாழ்க்கை தரத்தை உறுதிசெய்துவிட்டு தேசிய நல்லிணக்கத்தை ஸ்தாபிக்கலாம். நாட்டை பிளவுபடுத்துவதால்எவ்வாறு தேசிய நல்லிணக்கம் கட்டியெழுப்பப்படும். 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தினால் கிழக்கில் வாழும் முஸ்லிம்களும், வடக்கில் வாழும் தமிழர்களும் காணி உரிமைகளுக்காக மரண போராட்டத்துக்கு செல் லும் அளவுக்கு முரண்பட்டுக் கொள்வார்கள். ஆகவே 13ஆவது திருத் தத்தை முழுமையாக அமுல்படுத்குதினால் இருக்கும் நல்லிணக்கமும் இல்லாதொழியும். - என்றார் . (05)

# வெளிமுகப் பணம் அனுப்பல்கள் குறித்த மட்டுப்பாடுகள் தளர்வு

## நிதியமைச்சு நடவடிக்கை

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு செலாவணிச் சந்தையில் அவதானிக்கப் படும் முன்னேற்றங்களைக் கருத்திற்கொண்டு, வெளிமுகப்பணவனுப்பல்கள் தொடர்பில்விதிக்கப்பட்டிருந்த மட்டுப்பாடுகள் நிதியமைச்சால் தளர்த்தப்பட்டுள்ளன.

அந்நியச்செலாவணி வீதம் மீதான அழுத்தத்தைக் குறைத்து, நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டைப்பேணும்நோக்கில் 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வெளிநாட்டு செலாவணிச்சட்டத்தின் பிரகாரம் 2020 பெப்ரவரி 2 ஆம் திகதியிலிருந்து சில வெளிமுகப்பணவனுப்பல்களைத் தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு அல்லது மட்டுப்படுத்துவதற்கான உத்தரவு நிதியமைச்சரால் பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இவ்வாறானதொரு பின்னணியில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு செலாவணிச்சந்தையில்தற்போது அவதானிக்கப்படும் மற்றும் எதிர்பார்க்கப்படும் முன்னேற்றங்களைக் கருத்திற்கொண்டு, சர்வதேச கொடுக்கல், வாங்கல்களை மேலும் இலகுபடுத்தும் நோக்கில் மேற்குறிப்பிட்ட மட்டுப்பாடுகளைத் தளர்த்துவதற்கான புதிய கட்டளை நிதியமைச்சரால் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இது கடந்த ஜுன் மாதம் 28ஆம்திகதிமுதல்எதிர்வரும் 6 மாதங்களுக்கு அமுலில் இருக்குமென மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இப்புதிய கட்டளையின் பிரகாரம் புலம்பெயர்ந்தோரின் நடைமுறை மாற்றல்கள் மீதான கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டிருப்பதுடன், மூலதனக் கொடுக்கல் வாங்கல்களுக்கான வெளிமுகப்பணவனுப்பல்கள் மீதான சில மட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளன. ஏற்கனவே பிறப்பிக்கப்பட்ட கட்டளையில் உள்ள இவை தவிர்ந்த ஏனைய மட்டுப்பாடுகள் தொடர்ந்து நடைமுறையில் இருக்கும்.

இதுகுறித்த மேலதிக தகவல்களை வெளிநாட்டுச்செலாவணித் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையப்பக்கத்தில் பார்வையிடமுடியும். (05)

# கனடா பிரதமரின் கருத்துக்கு மீண்டும் இலங்கை எதிர்ப்பு

கறுப்பு ஜுலை குறித்த அறிக்கையில் கனடா பிரதமர் தமிழ் இனப்படுகொலை நினைவுதினம் குறித்து தெரிவித்துள்ளதை இலங்கை நிராகரித்துள்ளது.



கனடா பிரதமர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தமிழ் இனப்படுகொலை குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளதை நிராகரிப்பதாக அயலுறவுத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

உள்ளூர் வாக்குவங்கி தேர்தல் நலன்களுக்காக கனடா இலங்கையின் கடந்தகால மோதல்கள் பற்றிய தவறானகதையைதொடர்ந்து குறிப்பிடுகின்றது எனத் தெரிவித்துள்ள இலங்கையின் அயலுறவுத்துறை அமைச்சு, இது சமூக ஐக்கியம் என்ற இலக்கை அடைவதற்கு உகந்தது இல்லை எனவும் தெரிவித்துள்ளது.

ஸ்திரத்தன்மை, முன்னேற்றம், அமைதி, நல்லிணக்கம் ஆகிய-வற்றை இலங்கையின் அனைத்து மக்கள் மத்தியிலும் இலங்கையின் அனைத்து பகுதிகளிலும் மற்றும்வெளிநாடுகளில் வாழும் இலங்கை பாரம்பரியத்தை கொண்ட சமூகங்கள் மத்தியிலும் ஏற்படுத்தும் முயற்சிகளுக்கு கனடாவும் அதன் தலைவர்களும் ஆதரவளிக்கவேண்டும்என இலங்கை வேண்டுகோள் விடுத்துள்ளது. (05)

# புலிகளுக்கு வழங்கியதைப் போன்றே படையினருக்கும் மன்னிப்பு வேண்டும்

## இப்படிக் கோருகிறார் நாமல் எம்.பி.

கடந்தகாலங்களில்ஜனாதிபதியாகப் பதவி வகித்தவர்கள் தமிழீழ விடுதலை புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த பயங்கரவாதிகள் பலருக்கு பொதுமன்னிப்பு வழங்கினார்கள். அவர்களுக்கு ஜனாதிபதி மன்னிப்பு வழங்குவதிலும், சிறையில் இருந்தவர்களை விடுவிப்பதிலும்தவறில்லை.

இராணுவத்தில் இருந்தவர்களும் குற்றவாளியாக இருக்கின்றனர். அவர்களுக்கும் ஜனாதிபதி மன்னிப்பு வழங்க வேண்டும் என பொதுஜன பெரமு-னவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ வழக்கொன்றில் ஆஜராவதற்காக திங்கட்கிழமை நீதிமன்றத்துக்கு வருகை தந்திருந்த போது மத்திய வங்கி குண்டுத்தாக்குதலுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் தண்டனை வழங்கப்பட்ட இருவருக்கு அண்மையில் ஜனாதிபதியால் பொது மன்னிப்பு வழங்கப்பட்டமை தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப்பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடடவை வருமாறு -

கடந்த காலங்களில் ஜனாதிபதியாகப் பதவி வகித்தவர்கள் தமிழீழ விடுதலைபுலிகள் இயக்கத்தைச் சேர்ந்தபயங்கரவாதிகளுக்கு மன்னிப்பு வழங்கியதை நாம் பார்த்தோம். சந்தேகநபர் கள் பலருடன்நானும் சிறையில் இருந்தேன். 91 பேர் உயிரிழந்ததுடன் 200 பேருக்கும் அதிகமானோர் காயமடைந்த குற்றங்களுடன் தொடர்புடைய குற்றவாளிகளுக்குஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.



அந்தக் குற்றவாளிகளுடனும் நான் சிறையில் இருந்தேன். மெகசின் சிறைச்சாலையில் அவர்கள் என்னுடன் இருந்தார்கள். முறையாக அவர்களுக்கு ஜனாதிபதி மன்னிப்பு வழங்குவதிலும் 15 அல்லது 20 வருடங்கள் சிறையில் இருந்தவர்களை விடுவிப்பதிலும் தவறில்லை. இராணு-வத்தில் இருந்தவர்களும் குற்றவாளியாக இருக்கின்றனர்.

அவர்களுக்கும் ஜனாதிபதி மன்னிப்பு வழங்குவார் என நான் நம்புகிறேன். ஏனென்றால் அந்த சம்பவத்தை இத்துடன் மூட வேண்டும். இதனைத் தமிழீழ விடுதலை புலிகள் இயக்கத்தினருக்கு மாத்திரம் வழங்க முடியாது. - என்றார். (05)

# பெருந்தோட்ட மக்களுக்கான காணி உரிமம் தொடர்பான பிரச்சினைக்கு விரைவில் தீர்வு

## ரமேஷ் பத்திரண உறுதி

*பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 10 பேர்ச் காணி வழங்கப்பட வேண்டும் என்பது அரசாங்கத்தின் கொள்கை ரீதியான தீர்மானமாகும். இந்தக் காணி உரிமத்தை வழங்குவதில் தற்போது காணப்படும் நடைமுறை சிக்கலுக்கு விரைவில் தீர்வு காணப்படும். ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்க இந்த விடயத்தில் அவதானத்துடனும், உணர்வுபூர்வமாகவும் செயற்பட்டு வருவதாகப் பெருந்தோட்டக் கைத்தொழில்அமைச்சர்ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.*



*பெருந்தோட்ட மக்களுக்கு காணி உரிமம் இல்லாத விடயம் கவலைக்குரியது. இவ்வாறானபிரச்சினைகளைத் தீர்ப்பதற்குஅரசாங்கமும், பெருந்தோட்ட நிறுவனங்களும் இணைந்து செயற்பட வேண்டியது அவசியமாகும் என்றும் அமைச்சர் ரமேஷ் பத்திரண வலியுறுத்தினார். ஜனாதிபதி ஊடக மையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் -*

*பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 10 பேர்ச் காணி நிச்சயம் வழங்கப்பட வேண்டும் என்று அமைச்சரவையில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. கொள்கை ரீதியாக எடுக்கப்பட்ட இந்த தீர்மானம் நடைமு-றைப்படுத்தப்பட்டு வருகிறது. இதில் இதுவரை காணப்பட்ட நடைமுறை யாதெனில் 10 பேர்ச் காணிகாணப்பட்டாலும், அதில்வீடொன்றைநிர்மாணிப்பதற்கான வசதிகள் இல்லாவிட்டால் குறித்த காணிகள் பெருந்தோட்ட மக்களிடம்கையளிக்கப்படமாட்டாது.*

*பெருந்தோட்ட அமைச்சு மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு என்பன இவற்றுடன் தொடர்புபட்டு செயற்படுகின்றன. எனினும் தற்போது எடுக்கப்பட்டுள்ள தீர்மானங்களுக்கமைய, வீடமைப்பதற்காக நிதி வசதிகள் இல்லாவிட்டாலும் 10 பேர்ச் காணிகளை உரிய பெருந்தோட்ட மக்களுக்கு வழங்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. காணி உரிமம் வழங்கப்பட்டால் அந்த மக்களுக்கு கடன் மூலமாக அல்லது ஏதேனுமொரு வழியில் வீடொன்றை நிர்மாணித்துக் கொள்ள முடியும். பெருந்தோட்ட மக்களுக்கு இவ்வாறு காணி உரிமம் இல்லாத விடயம் கவலைக்குரியதாகும். காரணம் அவர் கள் பாரிய நெருக்கடிகளுக்கு மத்தியிலேயே வாழ்ந்து வருகின்றனர். எனவே பெருந்தோட்ட நிறுவனங்களும் இது தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டும்.*

*கடந்த 1991ஆம் ஆண்டு பெருந்தோட்டத் துறையை தனியாருக்கு வழங்கிய போது 4 லட்சத்து 50 ஆயிரம் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் காணப்பட்டனர். ஆனால் இன்று பல்வேறு காரணிகளை இந்த தொழிலை அவர்கள் கைவிட்டுச் செல்வதால் தற்போது 150 000 தொழிலாளர்கள் மாத் திரமே எஞ்சியுள்ளனர். இது தேயிலைதொழிற்துறைக்கு பாரிய சவாலாகும். பெருந்தோட்டத் துறையை பாதுகாக்க வேண்டுமெனில் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் முதலில் பாதுகாக்கப்பட வேண்டும். அதற்கு அரசாங் கமும், பெருந்தோட்ட நிறுவனங்களும் இணைந்துஅந்தமக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இது தொடர்பில் அவதானத்துடனும், உணர்வுபூர்வமாகவும் செயற்பட்டுவருகின்றார். - என்றார். (05)*

# வருடாந்தம் 12 ஆயிரம் பேரின் உயிர்கள் விபத்துகளில் காவு

## 10 சதவீதமானோர் நீரில் மூழ்கி இறப்பு

உலக நீரில் மூழ்குதல் தடுப்பு தினம் செவ்வாய்க்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது. இந் நிலையில், நீரில் மூழ்குதல் உள்ளிட்ட விபத்துக்களால் இலங்கையில் ஒவ்வொரு 8 மணித்தியாலத்துக்கு மூன்று மரணங்கள் ஏற்படுகின்றன என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட நிபுணத்துவ வைத்தியர்கள் மேலும் தெரிவித்தவை வருமாறு -

வயது முதிர்ந்த ஒருவர் இறப்பதற்கு ஓர் அடி நீர்மட்டம் கூட போதுமானது.

இலங்கையில் வருடாந்தம் 10 ஆயிரம் பேர் முதல் 12 ஆயிரம் பேர் வரை விபத்துக்களால் உயிரிழக்கின்றனர். அவர்களில் சுமார் 10 சத வீதமானோர் நீரில்மூழ்கி உயிரிழக்கின்றனர்.

20 வயதுக்கு மேற்பட்ட இளைஞர்கள் மற்றும் முதியவர்களே அதிக எண்ணிக்கையில் நீரில்மூழ்கிப்பலியாகின்றனர் என்றும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. உலகில்வருடாந்தம் 2 லட்சத்துக்கும் அதிகமானோர் நீரில் மூழ்கி உயிரிழக்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுவதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (05)

# நால்வர் கைது!

குடும்பத் தகராறு சம்பவம் ஒன்றை முன்னிறுத்தி, ஒரு லட்சத்து பத்தாயிரம் ரூபாவுக்கு ஒப்பந்தம் செய்து நபர் ஒருவரைத் தாக்கிய சம்பவம் தொடர்பில் பெண் உட்பட நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர் என களுத்துறை, தெபுவன பொலி-ஸார் தெரிவித்தனர்.

கொரியாவில் பணிபுரியும் ஒருவர், தனது மனைவி மூலம் ஒரு லட்சத்து பத்தாயிரம் ரூபாவுக்கு ஒப்பந்தம் கொடுத்து இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளார் என பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

தெபுவன, தொம்பதொட, யதவர பிரதேசங்களைச் சேர்ந்த 22, 25 மற்றும் 45 வயதுடையவர்களும், அயல் பிரதேசத்தில் வசிக்கும் கொரியாவிலிருந்து இந்தத் திட்டத்தைச் செயற்படுத்திய சந்தேக நபரின் மனைவியுமே இந்தச் சம்பவம் தொடர்பில் கைது செய்-யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (05)

# பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு கொலை அச்சுறுத்தல் விடுப்பு

## கோடீஸ்வர வர்த்தகரைக் கைது செய்ய நடவடிக்கை

ராஜாங்கனை பிரதேசத்தில் இசை நிகழ்ச்சி ஒன்றின் பாதுகாப்பில் ஈடுபட்டிருந்த பொலிஸார் மற்றும் அதிகாரிகளைப் பரிசோதிக்க சென்ற ராஜாங்கனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியை, இசை நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தார் எனக் கூறப்படும் கோடீஸ்வர வர்த்தகர் ஒருவர் மிரட்டியதாக பொலிஸ் உயர் அதிகாரிகளிடம் பொலிஸ் பொறுப்பதிகாரி முறைப்பாடு செய்துள்ளார்.




இவ்வாறு கொலை மிரட்டல் விடுத்ததாகக் கூறப்படும் இசை நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த கோடீஸ்வர தொழிலதிபர் மேலும் பலருடன் வந்தே இவ்வாறு மிரட்டினார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கொலைமிரட்டல் விடுத்ததாக கூறப்படும் கோடீஸ்வர வர்த்தகரை கைது செய்ய பொலிஸார் விசாரணைகளைமேற்கொண்டு வருகின்றனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## மாறாத தலைவர்கள்

2015ஆம் ஆண்டு மைத்திரி – ரணில் ஆட்சியை அதிகாரத்திற்குக் கொண்டு வந்ததில் அப்போதைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அதிக பங்கு இருந்தது. மட்டுமல்ல அந்த நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு 2019இல் அரசுத் தலைவராக கோட்டாபய ராஜபக்ச தேர்ந்தெடுக்கப்படும்வரையான காலப் பகுதியில் ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியைப் பாதுகாத்துத் தாங்கிப் பிடித்ததிலும் கூட்டமைப்புக்கு அதிக பங்கிருந்தது. இதனால் தமிழர்கள் மத்தியில் கூட்டமைப்பு அதகளவில் விமர்சிக்கப்பட்டும் வந்தது.

அந்த விமர்சனங்களையெல்லாம் தாண்டி ரணில் விக்கிரமசிங்கவுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நின்றதற்கு, அவருக்கு முண்டு கொடுத்ததற்கு காரணம் உண்டு. அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்கு ரணில் விக்கிரமசிங்க நிச்சயம் நடவடிக்கை எடுப்பார் என்கிற நம்பிக்கையே அந்தக் காரணம். ரணிலும் அந்த நம்பிக்கை பொய்த்துப் போகாத அளவிற்கு போக்குக் காட்டிக்கொண்டே இருந்தார். அதற்கு அவர் பயன்படுத்திக்கொண்டது புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான வரைவு தயாரிப்புப் பணிகளை.

குதிரை வண்டயில் குதிரைக்கு முன்னாள் கரட் கட்டித் தொங்கவிடுவதைப் போன்று புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிகளை தூக்கி வைத்த ரணில் விக்கிரமசிங்க, அதனை நோக்கித் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஓட வைத்ததன் மூலம் தனது காரியங்களைச் சாதித்துக்கொண்டார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவுடன் கிட்டத்தட்ட தனது ஆட்சிக்காலம்முழுவதையும்பாதுகாத்துக்கொண்டார். ஆனால், புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்கும் எந்தவித உள்நோக்மும் அவருக்கு இருக்கவில்லை. காலத்தை இழுத்தடிக்கவும் தனக்கு வேண்டியதைச் சாதிக்கவும்அவர்அதனைப்பயன்படுத்திக்கொண்டார்.

இப்போது அரசுத் தலைவர் பதவியில் அமர்ந்த பின்னர்அந்தபுதியஅரசமைப்புவரைவுகுறித்துரணில் விக்கிரமசிங்க எதுவும் பேசுவதில்லை. அத்தகைய ஒரு முயற்சி நடந்தது, அதன் மூலம் ஒரு புதிய அரசமைப்புக்கான வரைவு தயாரிக்கப்பட்டது என்பன அவருக்குஞாபகம்இருக்குமாஎன்பதுகூடத்தெரியாது. அப்படியிருந்தும் இந்தத் தடவை அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது என்கிற போர்வையில் மற்றொரு ஆயுதத்தைக் கையில் எடுத்துள்ளார் ரணில். ஆனால் இன்று அவருடன் கூட்டமைப்பு இல்லை. பதிலாக தமிழ் மக்கள் கூட்டணி உள்ளது.

யாராக இருந்தால் என்ன காலத்தை இழுத் தடிப்பதற்கு ரணிலுக்குத் தேவை ஒரு தமிழ் முகம் மட்டுமே. அந்த முகத்தின் ஆதரவுடன் அவரால் தீர்வு, தீர்வு, தீர்வு என்று கூவிக் கூவியே காலத்தைக் கடத்திவிட முடியும். அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தவது என்கிற அறிவிப்பின் கீழ் தற்போது அவர் தொடங்கியிருக்கும் முயற்சிகளையும் நேற்றைய சர்வகட்சிக் கூட்டத்தையும் பார்க்கும்போது அது சர்வநிச்சயமாகத் தெரிகின்றது.

அடுத்த அரசுத் தலைவர் தேர்தல் வரைக்கும் இந்த 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துதல் என்பதைக் காரணமாகக் காட்டியே காலத்தைக் கடத்திவிடுவார். அடுத்த தேர்தலில் ஒருவேளை அவர் வெற்றிபெற்று மீண்டும் அரசுத் தலைவரானால், அப்போதுவேறுஏதாவதுதீர்வுப்பொதிஎன்கிறபெயரில் அவர்கள் காலத்தைக் கடத்தத் தொடங்கிவிடுவார். தமிழர்கள் ஏமாளிகளாக இருக்கும் வரை இந்தச் சுழற்சியில் மாற்றம் ஏதும் இருக்கப்போவதில்லை.

# தமிழர்களின் நிரந்தர பாதுகாப்புக்கு ஒரே வழி ஈழம் அமைவதே ஆகும்

## பிரித்தானியாவில் வானதிர முழக்கம்













கறுப்பு ஜூலை படுகொலை இடம் பெற்று 40 ஆண்டுகால நினைவு நாளினை முன்னிட்டு பிரித்தானியாவின் பெருநகர மத்தியில் திரண்ட புலம்பெயர் தமிழர்கள் நீதி கோரி எழுச்சி பேரணி ஒன்றை நடத்தினர்.

ஈழம் அமைதலே தமிழ் மக்களின் நிரந்தர பாதுகாப்பிற்கான ஒரே தீர்வு அத்துடன் இலங்கையில் சுபீட்சத்துக்கும் ஸ்திரத்தன்மைக்குமான பாதையும் இதுவேதான் என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு ஒன்று திரண்ட புலம்பெயர் தமிழர்கள் பிரித்தானிய அரசிற்கும் சர்வதேசத்துக்கும் தமது கோரிக்கைகளை முன்வைத்தனர்.கறுப்பு ஜூலை படுகொலை இடம்பெற்று 40 ஆண்டுகாலநினைவுநாளை முன்னிட்டு பிரித்தானியாவின் பெருநகர மத்தியில் திரண்ட புலம்பெயர் தமிழர்கள் நீதி கோரி எழுச்சி பேரணி ஒன்றை நடத்தினர்.

ஈழம் அமைதலே தமிழ் மக்களின் நிரந்தர பாதுகாப்பிற்கான ஒரே தீர்வு அத்துடன் இலங்கையில் சுபீட்சத்துக்கும் ஸ்திரத்தன்மைக்குமான பாதையும் இதுவேதான் என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு ஒன்று திரண்ட புலம்பெயர் தமிழர்கள் பிரித்தானிய அரசிற்கும் சர்வதேசத்துக்கும் தமது கோரிக்கைகளை முன்வைத்தனர். கறுப்பு ஜூலை படுகொலை இடம்பெற்று 40 ஆண்டுகால நினைவு நாளினை முன்னிட்டு பிரித்தானியாவின் பெருநகர மத்தியில் திரண்ட புலம்பெயர் தமிழர்கள் நீதி கோரி எழுச்சி பேரணி ஒன்றை நடத்தினர்.

ஈழம் அமைதலே தமிழ் மக்களின் நிரந்தர பாதுகாப்பிற்கான ஒரே தீர்வு அத்துடன் இலங்கையில் சுபீட்சத்திற்கும் ஸ்திரத்தன்மைக்குமான பாதையும் இதுவேதான் என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு ஒன்று திரண்ட புலம்பெயர் தமிழர்கள் பிரித்தானிய அரசிற்கும் சர்வதேசத்திற்கும் தமது கோரிக்கைகளை முன்வைத்தனர். இனப்படுகொலை நடைபெற்று 40 ஆண்டுகள் ஆன நிலையில் இதுவரையில் எந்தவித நீதியும் கிடைக்காத நிலையில் சர்வதேசத்திடம் நீதி கோரி பிரித்தானிய புலம்பெயர் தமிழர்கள் செவ்வாய்க்கிழமை மாலை டிராபல்கர் சதுக்கத்தில் எழுச்சி பேரணியில் ஈடுபட்டனர்.

மாலை 5 மணியளவில் ஆரம்பமான இந்நிகழ்வில் பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மனித உரிமை ஆர்வலர்கள் என பலர் கலந்துகொண்டனர். பிரித்தானியாவில் உள்ள பல தமிழ் அமைப்புக்கள் மற்றும் தமிழ் பாடசாலைகள், சங்கங்கள் போன்ற அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்து நடத்திய இந்நிகழ்வில் இனப்படுகொலைக்கு நீதி வழங்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்திய பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மனித உரிமை ஆர்வலர்களின் உரைகள் இடம்பெற்றதுடன் தமிழர் மீதான படுகொலைகளை மாணவர்கள் கலை வடிவில் வெளிப் படுத்தினர்.

மேலும் இலங்கை வரலாற்றில் கறுப்பு ஜூலையின் முக்கியத்துவம் பல தசாப்தகாலயுத்தத்தில்கறுப்புஜூலையின் தாக்கம் தமிழர்கள் நீதி மற்றும் உரிமைகளை தேடிக்கொண்டிருக்கும் இடம் எப்படி நமது இலக்குகளை அடைவோம் ஆகிய கருப்பொருள்களை உள்ளடக்கி னுசமதுரா இராசரத்தினமும் 1983 இனக்கலவரத்தின் போது தனது நேரடி அனுபவத்தை தணிகாசலமும் நிகழ்த்தினர்.

அத்துடன் சர்வதேச குற்றவியல் மற்றும் மனித உரிமைகள் சட்டம் போன்ற சட்டத்துறைகளில் சர்வதேச சட்ட நிபுணரான டோபி கேட்மன் , மற்றும் பரேல் அமைப்பின் பிரதிநிதி அபிராபி ஆகியோரும் சிறப்புரைகள் ஆற்றினர். (05)


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Kothu Rotty With Vegitable
In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swabpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# கிராமங்களுக்குக்கூட செல்லமுடியாதிருந்த அன்றைய நிலைமை இப்போது மாறிவிட்டது

## எஸ்.பி.திஸாநாயக்க எம்.பி தெரிவிப்பு



எதிர்வரும் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன என்ற வகையில் போட்டியிடுவோம். நாம் தேர்தல் தொடர்பில் அச்சமடையவில்லை.

அன்று அச்சமடைந்தோம். அச்சத்தோடு மாத்திரம் இருக்கவில்லை. கிராமங்களுக்குக் கூட செல்ல முடியாத நிலை காணப்பட்டது.

இந்த நிலைமை தற்போது அவ்வாறில்லை என பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் நெலும் மாவத்தையிலுள்ள கட்சி தலைமையகத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பஸில் ராஜபக் ஷவை சந்தித்து கலந்துரையாடி இருந்தனர்.

இதன்போது கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க சந்திப்பின்போது ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்- ஸ்ரீலங்காபொதுஜன பெரமுன என்ற ரீதியில் பொறுப்புகளை சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு வழங்குமாறும் கோரினோம். இருப்பினும் அவர்கள் வழங்கவில்லை.

இது தொடர்பில் நாம் கவலையடைகிறோம். தற்போது நடைமுறையிலுள்ள வேலைத் திட்டங்களுக்கு வலு சேர்க்கும் நிலைப்பாட்டில் நாம் இருக்கிறோம்.

எதிர்வரும் தேர்தல்களில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன என்ற வகையில் போட்டியிடுவோம். மேலும் நாம் தேர்தல் தொடர்பில் அச்சமடையவில்லை.

இருப்பினும் நாம் அச்சமடைந்தோம். அச்சத்தோடு மாத்திரம் இருக்கவில்லை. கிராமங்களுக்குகூட செல்ல முடியாத நிலை காணப்பட்டது.

மரண வீடுகளுக்கு கூட செல்ல முடியாத நிலை காணப்பட்டது. தற்போது அவ்வாறில்லை. எமது தரப்பினர்கள் சுதந்திரமாக கிராமங்களுக்கு சென்று மக்களுடன் வாழ்கின்றனர். - என்றார். (05)





# 24 புள்ளிகளை பெற்றால் சாரதி அனுமதி இரத்து

## முக்கிய அறிவிப்பு வெளியீடு

போக்குவரத்து விதிமீறல்களுக்கான தகைமை இழப்பு புள்ளி செயல்முறை அடுத்த ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

இந்த முறையின் கீழ், 24 புள்ளிகளைபெறும் சாரதியின் அனுமதிப்பத்திரம் உடனடியாக இரத்து செய்யப்படும் என போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்தார்.

இதற்கிடையில், வீதிகளில் இடம்பெறும்தவறுகளுக்குகுறித்த வீதியிலேஅபராதம்அறவிடப்படும் முறையை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.

இதற்கான அனைத்து பரிவர்த்தனைகளையும் டெபிட் அல்லது கிரெடிட் கார்ட் மூலம் பெற்றுக்கொள்ள மோட்டார் போக்குவரத்து திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

ஏழு தசாப்தங்களாக நடைமுறையில் உள்ள மோட்டார் போக்குவரத்து சட்டத்தை புதுப்பித்து புதிய சட்டத்தை அறிமுகப்படுத்த போக்குவரத்து அமைச்சு நடவடிக்கை எடுத்து வருவதாக அவர் குறிப்பிட்டார்.

மேலும் இலங்கை போக்குவரத்து சபையால் இயக்கப்படும் 50 மின்சார பஸ்களை சேவையில் இணைப்பதற்கான திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் கூறினார்.

(05)

# இந்த ஆண்டுக்கான சிறுபோகச் செய்கையின் அறுவடை இரணைமடு குளத்தின்கீழ் ஆரம்பம்

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் கீழ் இவ்வாண்டு மேற்கொள்ளப்பட்டுள்ள சிறுபோக செய்கையின் அறுவடைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தின் பாரிய நீர்ப்பாசன குளமாக காணப்படுகின்ற இரணைமடுக்குளத்தின் கீழ் இவ்வாண்டு 13 ஆயிரத்து 500 ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்வதற்கான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு குறித்த குளத்தின் கீழான சிறுபோக செய்கை கடந்த ஏப்ரல் மாதம் ஆரம்பிக்கப்பட்டன.

தற்போது சிறுபோக அறுடைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. குறிப்பாகபண்ணங்கண்டி, சின்னக்காடு,மகிழங்காடு உள்ளிட்ட இடங்களில் சிபோக அறுவடைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நெல் சந்தைப்படுத்தல் சபை மற்றும் அரச நெற்களஞ்சியம் என்பவற்றினூடாக அறுவடைசெய்யும் நெல்லை விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு அறுவடைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் அன்மைய நாள்களாக இரவு பகலாக கட்டாக்காலி கால்நடைகளால் அறுவடைக்குதயாரான நெற்பயிர்கள் அழிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(05)

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

தொடர்புகளுக்கு: 0777 43 5557


OKAYA
ELECTRIC VEHICLES
dsl
பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை
விட 77% இலாபமான பாவனைக்கு
The inEVitable
Future of Smart Mobility
FAAST-F4
140-160 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
FAAST-F2T
80-85 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
FREEDOM
70-75 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
Rs.550,000/-
இந்தியாவில் அதி வேகமாக
விற்பனையாகும் மின்சார வாகனம்
2
3

# திருத்தப்பட்ட175 பேருந்துகள் மீளச் சேவைக்குத் திரும்பின







நாட்டில் இறக்குமதி கட்டுப்பாடுகள் காரணமாக ஏற்பட்ட உதிரிப் பாகங்களின் தட்டுப்பாடு மற்றும் கொள்வனவு செய்வது தொடர்பிலான நிதிநெருக்கடிஎன்பனகாரணமாக சேவையில் இருந்து நிறுத்தப்பட்டிருந்த இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான 175 பஸ்கள் பழுதுபார்க்கப்பட்டு மீண்டும் பயணிகள் போக்குவரத்து சேவையில் இணைப்பது தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் திங்கட்கிழமை பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன இது தொடர்பான ஆவணங்களை ஜனாதிபதியிடம்கையளித்தார்.

மூன்று வருடங்களுக்கு மேலாக சேவையில் இருந்து ஒதுக்கப்பட்டிருந்த 852 பஸ்களில், 400 பஸ்களை பழுதுபார்க்கும் வேலைத் திட்டம் போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தனவின் பணிப்புரைக்கமைய திறைசேரி ஒதுக்கீட்டின் கீழ் டிப்போக்கள் மட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

அதன் கீழ் திருத்தப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்ட 175 பஸ்கள், கையளிக்கப்பட்டதுடன் இதற்காக சுமார் 30 கோடி ரூபா செலவிடப்பட்டது.

இலங்கைபோக்குவரத்து சபையின் தொழில்நுட்ப பிரிவின் பொறியியலாளர்கள் மற்றும் தொழிநுட்ப நிபுணர்களின் பங்களிப்புடன் இந்தத் திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இன்று கையளிக்கப்பட்ட 175 பஸ்களில் 15 பஸ்கள் பாடசாலை மாணவர்களின் போக்குவரத்துக்காக 'சிசு செரிய' வேலைத்திட்டத்திற்கும், மற்றைய பஸ்கள் பயணிகள் போக்குவரத்து சேவைகளுக்காக அந்தந்த டிப்போக்களுக்கு ஒப்படைக்கப்படும்.

இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் எஸ்.எம்.டி.எல்.கேடிஅல்விஸ், பிரதான நிறைவேற்று அதிகாரி மகேஷ் குலதிலக, பிரதி பொதுமுகாமையாளர்பண்டுக சுவர்ணஹங்ஸ, பிரதம இயந்திரவியல் பொறியியலாளர்லக்ஷ்மன்புஷ்பகுமார ஆகியோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (05)

# மகனைக் கொன்று சடலத்தை கிணற்றில் வீசிய தந்தை கைது

அநுராதபுரம், கஹட்டகஸ்திகிலிய பகுதியில் நபரொருவரின் கழுத்தை அறுத்து கொலை செய்தார் என்ற சந்தேகத்தில் ஒருவரை திங்கட்கிழமை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 5 ஆம் திகதி கஹட்டகஸ்திகிலிய பகுதியில் விவசாய கிணறு ஒன்றிலிருந்துநபரொருவரின்சடலத்தை பொலிஸார் மீட்டுள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸாரால்மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது கொலைசெய்த நபரான தந்தைக்கும் கொலைசெய்யப்பட்ட அவரது மகனுக்குமிடையில் நீண்ட நாள்களாக முரண்பாடு நிலவிய வந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில், கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் அவரை கொலைசெய்ததாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# ஒரு லட்சத்துக்கும் அதிகமான சுற்றுலா பயணிகள் இந்த மாதம் நாடு வருகை

*ஜூலை மாதத்தில் இதுவரை ஒரு லட்சத்துக்கும் அதிகமான சுற்றுலாப்பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளனர்.*

*சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையால் வெளியிடப்பட்ட சமீபத்திய தரவுகளின்படி, இந்த மாதத்தின் முதல் 23 நாள்களில் 104,664 சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளனர்.*

*இவர்களில் இந்தியாவில் இருந்து அதிகஎண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகள் வந்தனர் என சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.*

*இதுவரை மொத்தம் 17,909 இந்தியர்கள் இலங்கைக்கு வந்துள்ளனர் என்றும் பிரித்தானியாவில் இருந்து 12,404 சுற்றுலாப் பயணிகளும், சீனாவிலிருந்து 7,082 பேரும் வருகைதந்துள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.*

*ஜேர்மனியிலிருந்து 5,812 பேரும், ரஷ்யாவிலிருந்து 5,419 பேரும், பிரான்ஸிலிருந்து 5,039 சுற்றுலாப் பயணிகளும் இந்த மாதம் இலங்கைக்கு வந்துள்ளனர்.*

*ஜூன் மாதத்தில் மொத்தம் 100,388 சுற்றுலாப் பயணிகள் இலங்கை வந்தனர் எனவும் இந்த வருடத்தில் இதுவரை 729,538 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (05)*

# 17 வயதுச் சிறுமியைக் காணோம் பொலிஸார் வெளியிட்ட அறிவிப்பு

நீர்கொழும்பு, லியனகேமுல்ல பிரதேசத்தில் 17 வயதுடைய யுவதி ஒருவர் காணாமல் போயுள்ளார் என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இது குறித்து அறிவிப்பை வெளியிட்ட பொலிஸார், இது தொடர்பில் யுவதியின் தந்தையால் நீர்கொழும்பு பொலிஸில்முறைப்பாடுசெய்யப்பட்டதையடுத்து சம்பவம் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காயத்திரி தேவஷானி சூரியசிங்க என்ற யுவதியே காணாமல் போயுள்ளார் எனவும், இவர் தொடர்பில் இதுவரை எவ்வித தகவலும் கிடைக்கவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

எனவே, இவர் தொடர்பில் ஏதேனும் தகவல் தெரிந்தால் கீழ்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் பொலிஸாரைத் தொடர்பு கொள்ளுமாறு பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நீர்கொழும்பு பொலிஸ் - 071-8 591 630 நீர்கொழும்புபொலிஸ்-031-2 222 227. (05)

# லிந்துலையில் தீ விபத்து 24 வீடுகள் கடும் சேதம்!

லிந்துலைபொலீஸ்பிரிவுக்குட்பட்ட பெரிய இராணிவத்தை தோட்டத்தில் நேற்று (செவ்வாய்கிழமை) ஏற்பட்ட தீ பரவல் காரணமாக 24லயன் குடியிருப்பு ஒன்று தீக்கிரையாகியுள்ளது.

குறித்த தீ விபத்தைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் பொலிஸார் மற்றும் பிரதேச மக்கள் ஈடுபட்டு வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இந்தத் தீ விபத்தால் நான்கு வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் தீ விபத்து மின்சார ஒழுக்கில் ஏற்பட்ட கோளாறு காரணமாகவே சம்பவித்திருக்கலாம் என பொலீஸார் சந்தேகிக்கின்ற நிலையில் இது தொடர்பான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)



காலைக்கதிர் Kalaikkathir

# 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவதற்கு தமிழ் தலைமைகள் ஒத்துழைக்க வேண்டும்

## இரா.துரைரட்ணம் கோரிக்கை



13 ஆவது திருத்தத்தை 35வருடங்களுக்குப்பின்னர் அமுல்படுத்துவதற்குத் தமிழ்த் தலைமைகள் ஒத்துழைக்க வேண்டும் என கிழக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினரும் ஈ.பி.ஆர்.எல்.எப். இன் சிரேஷ்ட தலைவருமான இரா.துரைரெட்னம் தெரிவித்துள்ளார்.

மக்கள் பிரதிநிதிகளுக்கு இடையிலான முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கான களம் மாவட்ட அபிவிருத்திகுழுக்கூட்டமோ பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டமோ அல்ல பிரச்சினைக்குரிய மக்கள் பிரதிநிதிகள் தெரிந்து கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மட்டு.ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடகவி-யலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

இன்று இலங்கையை பொறுத்தவரையில் ஒரு பொன்னான நாள். 88 ஆம் ஆண்டு இலங்கைக்கு இந்தியாவுக்கும் இடையில் ஏற்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தம் ஊடாக உருவாக்கப்பட்ட மாகாண சபை முறைமை 35 வருடங்களைத் தாண்டி இலங்கைக்கும் இந்தியாவுக்கும் பல பேச்சுகள் இடம்பெற்று இந்த 35 வருடங்களை விட இன்று ஜனாதிபதி இந்தியாவுக்குக் கடந்த வாரம் சென்று இந்திய ஜனாதிபதியும் இலங்கை ஜனாதிபதியும் பேச்சு நடத்தி அதில் 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பாகவும் ஒரு வலுவான அதிகாரப் பரவலாகத் தமிழர்களுக்குச் சாதகமாக செய்ய வேண்டும் என இந்தியா கூறுகின்ற நிலையில் ஜனாதிபதி கொழும்பில் சகலகட்சிகளையும் அழைத்து பேச்சு நடத்துவது என்பது ஒரு வரவேற்கத்தக்க விடயம்.

இலங்கை - இந்திய ஒப்பந்தம் என்பது ஏற்கனவே இலங்கை அரசியல் யாப்பில் உள்ளடக்கப்பட்ட ஒரு விடயம் இதில் தமிழ் தலைவர்கள் தெளிவாக இருந்து கொள்ள வேண்டும். பதிமூன்றாவது திருத்தச் சட்டத்தில் உள்ள அதிகாரங்கள் ஏற்கனவே அரசியல் யாப்பில் உள்ளடக்கப்பட்ட விடயங்கள் ஆகும். அதில் நடைமுறைப் படுத்துவது தொடர்பான சம்பந்தப்பட்ட விடயங்கள் தான் சில முரண்பாடுகள் காணப்படுகின்றன.

நடைமுறை படுத்துவது தொடர்பான விடயங்களில் காணி தொடர்பான விடயங்கள், பொலிஸ் தொடர்பான விடயங்கள் அமுல்படுத்துவதா இல்லையா என சிங்கள தேசியவாதம் தமிழ் மக்கள் தொடர்பாக நம்பிக்கையீனம் காரணமாக பல கருத்துக்களை முன்வைக்கின்ற நிலையில் இலங்கைக்கு இந்தியாவுக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சு ஶ்ரீன் ஊடாக கொழும்பில் தமிழ் தலைமைகளை ஜனாதிபதி அழைத்து பேசுவது என்பது ஒரு பொற்காலம்.

இந்த விடயத்தில் ஏற்கனவே உள்ள விடயங்களை அமுலாக்குவ தற்கு தமிழ்த் தலைமைகள் தவறி விடக்கூடாது. தமிழ்த் தலைமைகளைப் பொறுத்தவரையில் இந்தப் பேச்சு ஊடாக 13 ஆவது இல் உள்ள விடயங்களை அமுல்படுத்து-வதற்கு சரியான ஒரு செயல் வடிவத்தைக் கொடுக்க வேண்டும்.

35 வருடங்களின் பிற்பாடு இவ்வாறான ஒரு விடயம் வருவது என்பதை நாங்கள் ஏற்றுக் கொண்டே ஆக வேண்டும் இதை நாங்கள் மருதழிக்கும் பட்சத்தில் சிங்கள தேசிய-வாதத்தில் உள்ள சில அரசியல் தலைவர்கள் இது நிராகரிக்கப்பட வேண்டும். இது ஏற்றுக் கொள்ளப்பட முடியாதது, இது தனிநாட்டைக் கூறுகின்ற ஒரு செயல் வடிவாகவும் என கங்கணம் கட்டிக்கொண்டு இதைக் குழப்பதற்கான முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கும் தருவாயில் தமிழ்த்தலைமைகளும் இதனை நிராகரிக்கும் பட்சத்தில் தமிழர்களுக்கு ஒரு தீர்வும் எட்டப்படாத நிலை பல வருட காலத்துக்கு ஏற்படும் என்பதை மறந்து விடக்கூடாது. இதில் ஏதாவது லாப நட்டங்கள் ஏற்படும் பட்சத்தில் இதை மறுக்கின்ற தமிழ் தலைமைகள் இதற்கு பொறுப்புக் கூறியாகவேண்டும் பொறுப்பெடுத்தேயாக வேண்டும். ஆகவே, இன்று இடம் பெறுகின்ற பேச்சின் ஊடாகஎதிர்காலத்தில்13ஆவது திருத்தச் சட்டத்தை அமல் படுத்துவதற்காகத் தமிழ்த் தலைமைகள் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும் என நாங்கள் கோரிக்கையை முன்வைக்கின்றேன்.

இதில் ஒரு சிலருக்குக் கருத்து முரண்பாடுகள் இருக்கலாம். ஏற்றத்தாழ்வுகள் இருக்கலாம். சுயாட்சி அற்ற விடயங்களாக இருக்கலாம். 13 ஆவது திருத்தச் சட்டம் தமிழர்களுக்குரிய நிரந்தரத் தீர்வு அல்ல. ஆனால் அரசியல் யாப்பில் உள்ளடக்கப்பட்ட விடயங்களை 35 வருடங்களின் பிற்பாடு அமுல்படுத்த முயற்சிக்கின்றமை என்பதை நாங்கள் ஏற்றுக் கொண்டே ஆக வேண்டும் அதனை அமுல்படுத்துவதற்கு தமிழ் தலைமைகள் ஒத்துழைக்க வேண்டும். - என்று தெரிவித்துள்ளார். (05)

# பல்வேறு நாடுகளின் தூதுவர்களுடன் எதிர்க்கட்சித் தலைவர் விசேட சந்திப்பு







12 நாடுகளை பிரதிநிதித்துவப்படுத்தும் தூதுவர்கள் மற்றும் எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் உள்ளிட்ட குழுவினருடன் விசேட கலந்துரையாடலொன்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் கொழும்பில் இடம்பெற்றது.

இதன்போது பல்வேறு விடயங்கள் தொடர்பில் சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டதுடன் இலங்கையின் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. இலங்கையில் ஜனநாயகத்தை உறுதிப்படுத்துதல், அரசமைப்பைப் பாதுகாத்தல் மற்றும் உள்ளூராட்சி மன்ற தேர்தலை நடத்துதல் போன்ற விடயங்களும் இங்கு கலந்துரையாடப்பட்டன.

அரசாங்கத்தின் ஜனநாயகத்தின் அப்பட்டமான மீறல் போலவே மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளில் அரசின் திற மையின்மை, ஊழல் திர்ப்பு நடவடிக்கையை முறையாக செயற்படுத்தாதது மற்றும் சட்டத்துறையில் எழுந்துள்ள பல பிரச்சினைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

ஐக்கிய அமெரிக்கா, நெதர்லாந்து, இந்தியா உயர்ஸ்தானிகர, நியூஸிலாந்து உயர்ஸ்தானிகர், ஆஸ்திரேலியாவின் உயர்ஸ்தானிகர், பிரான்ஸ் தூதுவர், கனேடிய உயர்ஸ்தானிகர, ஐக்கிய இராச்சியத்தின் பதில் பிரதி உயர்ஸ்தானிகர், ரோமானிய தூதுவர், ஜப்பானிய பிரதி தூதுக்குழுவின் பிரதானி, இத்தாலிய பிரதி தூதுக்குழுவின் பிரதானி, ஐரோப்பிய ஒன்றிய அரசியல் விவகாரப் பிரிவின் பிரதானி ஆகியோர் இதில் பங்கேற்றிருந்தனர்.

வேண்டுமென்றே தேர்தலை ஒத்திவைப்பதன் மூலம் ஜனநாயகத்துக்கு ஏற்பட்டுள்ள பாரிய அச்சுறுத்தல் குறித்து எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பாக தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்களின் கவனத்துக்குக் கொண்டு வந்தார். மக்களின் பிரச்சினைகளில் அக்கறையின்மையால் அஸ்வெசும போன்ற வேலைத்திட்டங்களும் தோல்வியடைந்துள்ளன எனத் தெரிவித்த எதிர்க் கட்சித் தலைவர், நாட்டின் சுகாதாரத்துறை எவ்வாறு சீர்குலைந்துள்ளது மற்றும் தரமற்ற மருந்துகளால் மக்கள் எவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது குறித்தும் தெளிவுபடுத்தியிருந்தார். சட்டத்துறையில் பல சிக்கல்கள் உள்ளன என்றும், சகலசட்டமூலங்களிலும் குறைபாடுகள் உள்ளன எனவும், இதனால் சட்டத் துறைக் கட்டமைப்பின் தரம் குறைந்துள்ளதாகவும் தூதுவர்களிடம் எடுத்துரைத் திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (05)

# சட்டவிரோத காடழிப்பில் ஈடுபட்ட இருவர் முல்லைத்தீவில் கைது!

மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதியில் சட்டவிரோத காடழிப்பில் ஈடுபட்ட இருவர் நட்டாங்கண்டல் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன், காடழிப்புக்கு பயன்படுத்தப்பட்ட உபகரணங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டம் மாந்தை கிழக்கு பிரதேச செயலக ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் சட்டவிரோத காடழிப்பில் ஈடுபட்ட இருவரே நட்டாங்கண்டல் பொலிஸாரால் கைது செய்-யப்பட்டுள்ளனர்.

குற்றத்தடுப்பு பொலிஸார் மற்றும் நட்டாங்கண்டல் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆகியோருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலை அடுத்து நடவடிக்கையில் இறங்கிய பொலிஸார், காடழிப்பில் ஈடுபட்ட இருவரைக் கைது செய்ததுடன் காடழிப்பிற்கு பயன்படுத்திய மரம்வெட்டும் இயந்திரங்களை பறிமுதல் செய்தனர்.

சம்பவத்தில் அதே இடத்தை சேர்ந்த 68 மற்றும் 38 வயதுடைய இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்த நட்டாங்கண்டல் பொலிஸார், இருவர் மீதும் அரச காணியை அத்துமீறி பிடித்தல் மற்றும் பெறுமதிமிக்க மரங்களை வெட்டுதல் உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வழக்குத் தாக்கல் செய்-துள்ளனர்.

இதேவேளை இருவரையும் பொலிஸ் பிணையில் செல்ல அனுமதித்த பொலிஸார், குறித்த வழக்கை வரும் ஓகஸ்ட் மாதம் 09 ஆம் திகதி மாங்குளம் நீதிவான் நீதிமன்றில் பாரப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவித்தனர். (05)

# புற்றுநோய் குறித்த விழிப்புணர்வு அமர்வு





கோப்பாய் ஆசிரியர்கள் கலாசாலையில் நூற்றாண்டு விழா கால புதன் ஒன்றுகூடலில் நேற்று (புதன்கிழமை) புற்றுநோய் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கு இடம்பெற்றது.

கலாசாலை அதிபர் ச. லலீசன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், யாழ்.போதனா வைத்தியசாலை புற்றுநோய் சத்திர சிகிச்சை நிபுணர்களான வைத்தியர் க.ஶ்ரீதரன், வைத்தியர் தனுஜா மகேந்திரன் ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர்.

ஆசிரிய மாணவர் சார்பில் கருத்துரையை உடற்கல்வி நெறி ஆசிரிய மாணவி பூரணி நிரந்தன் ஆற்றியதுடன், உடற்கல்வி நெறி ஆசிரிய மாணவர் சி. தினேஷ்குமார் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கியிருந்தார். (05)

# வர்த்தக சங்கக் கட்டடம் தொடர்பில் அபிவிருத்திகுழு கூட்டத்தில் குழப்பம்!



வவுனியா வர்த்தக சங்கத்துக்குரிய புதிய கட்டடம் எந்தவித அனுமதியும் இல்லாமல் அமைக்கப்பட்டதாகத் தெரிவித்து வவுனியா மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் காரசாரமாக விவாதம் முன்வைக்கப்பட்டது.

வவுனியா மாவட்ட அபிவிருத்திக்குழுக்கூட்டம் ஆளுநர் பி.எஸ்.எம். சாள்ஸ் தலைமையில் நேற்று (புதன்கிழமை) இடம்பெற்றது.

இதன்போது வவுனியா நகரின் அபிவிருத்தி தொடர்பாக நகர அபிவிருத்தி அதிகாரசபையால் திட்ட முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டது.

இதன்போது நகரில் ஏற்கனவே சட்டவிரோதமாகக் கட்டப்பட்ட கட்டங்கள் தொடர்பாகவும், நகரில் உள்ள காணிகளைப் பாதுகாப்பது தொடர்பாகவும் எவ்வாறான நடவடிக்கையை எடுப்பது என்று அபிவிருத்திகுழு தலைவரால் கோரப்பட்டதுடன், வவுனியா வர்த்தக சங்கத்தால் அமைக்கப்பட்ட புதிய கட்டடம் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டதாகவும் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

குறித்த கட்டடம் அமைந்துள்ள காணி அரச காணியாக இருப்பதால் பிரதேசசெயலாளர் ஏன் அதற்கான நடவடிக்கையை எடுக்கவில்லை என்று ஆளுநரால் கோரப்பட்டது.

இதற்கு பதில் அளித்த பிரதேச செயலாளர் இது தொடர்பாக நகரசபைக்கு கடிதம் அனுப்பியதாகவும், அவர்கள் அதற்கான நடவடிக்கையினை எடுக்கவில்லை. அப்படியானால் வர்த்தகசங்கம் செய்தது தவறு நான் செய்தது பிழையா என்று தெரிவித்தார். எனினும் காணி பிரதேச செயலாளரின் கீழ் இருப்பதால் நீங்கள் கட்டடம் அமைக்க முன்னரே அதற்கான நடவடிக்கையினை எடுத் திருக்க வேண்டும் என்று ஆளுநர் தெரிவித்திருந்தார்.

குறித்தவிடயம் தொடர்பாக மாவட்ட குழுக்கூட்டத்தில் காரசாரமான விவாதம் இடம்பெற்றது.

மேலும் இவ்வாறான அனுமதியற்ற கட்டடங்கள் தொடர்பாக உடனடி நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு பணித்த ஆளுநர் ஏற்கனவே அமைக்கப்படிருந்த கட்டடங்களின் பெறுமதிக்கமைய அவர்களிடமிருந்து குத்தகையை அறவிட்டு குத்தகை அடிப்படையில் அதனை வழங்குவதற்கான நடவடிக்கையை எடுக்குமாறும் ஆளுநர் தெரிவித்திருந்தார். (05)

# சீனாவிற்கு செல்லும் இலங்கைக் கறுவா!

உலகம் முழுவதும் வாசனை திரவியங்களுக்கென பெயர் பெற்ற இலங்கையில் இருந்து கறுவா மெக்ஸிகோ மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளுக்கும், பேரு போன்ற நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

ஏற்றுமதி சந்தையில் கசியா கறுவா மற்றும் கறுவா என இரண்டு வகையான கறுவாப்பட்டை உள்ளது மற்றும் இவற்றில், கசியா கறுவாப்பட்டையின் தரம் உண்மையான கறுவாப்பட்டையின் தரத்தை விடக் குறைவாக இருப்பதால், இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் உண்மையான கறுவாப்பட்டைக்கு இன்னும் அதிக கேள்வி உள்ளது.

இந்நிலையில் , எதிர்காலத்தில் இலங்கையில் இருந்து சீனாவிற்கு கறுவாவை ஏற்றுமதி செய்வதற்கான பேச்சுகள் தற்போது இடம்பெற்று வருவதாக ஏற்றுமதி விவசாய திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஏ.பி.பி.திஸ்னா தெரிவித்துள்ளார்.

கசியா கறுவாப்பட்டையை அதிகம் நுகரும் நாடுகளில், சீனா தற்போது முதலிடத்தில் உள்ளது. எனவே, சீனாவுக்கு கறுவாப்பட்டை ஏற்றுமதி செய்யும் சந்தர்ப்பம் கிடைத்தால், அது நாட்டின் ஏற்றுமதித் துறையில் பாரிய வளர்ச்சியாக அமையும் என பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார். (05)


யாழில்
முதல் முறையாக
சிறு கைத்தொழில் முயற்ச்சியாளர்களின்
கொண்டாட்டம்
Tourism
Northern Province
இணைந்து வழங்குவோர்
Visit North
Experience the Hospitality
NCI
CHAMBER OF COMMERCE AND INDUSTRIES OF YARLPANAM
CCIY
UNITY IS STRENGHT
அனுசரணையாளர்
synamon global
JANASHAKTHI Life
Orient Finance
FESTA JUNINA
happymarket.lk
அல்லங்காடி
கொண்டாட்டம்
ஒவ்வொரு
சனிக்கிழமைகளிலும்
04:00PM - 10:00PM
யாழ் கோட்டை
(பண்ணை சுற்றுவட்டம்)
NGO Partner
Sustainability Partner
World Vision
SMILE zone
CCH
IDEA FACTORY
THE SOCIAL INNOVATIONS LAB
ஊடக அனுசரணை
ஒழுங்கமைப்பாளர்
காலைக்கதிர் Kalaikkathir
BirdFather
More Social More Business
happymarket.lk
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்